



# மதுரை மணி


Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 104 | உள்ளூர் - 14.04.2026 | செவ்வாய் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com

Madurai Edition | *Vol 55 | * Issue 104 | வெளியூர் - 15.04.2026 | புதன் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com







சுக்கிரப் பெயர்ச்சி... இந்த ராசிகளுக்கு அதிர்ஷ்டம் பெருகும்..!

தமிழ்நாடு ரயில்வே வேலை! 84 காலியிடங்கள்!!

பாஜக / விசிக தேர்தல் அறிக்கை வெளியிடு!

அனல் பறக்கும் தேர்தல் செய்திகள்!



பாராளுமன்ற வளாகத்தில் அம்பேத்கர் படத்திற்கு தலைவர்கள் மரியாதை செலுத்தினர்.

## நிதிஷ் ராஜினாமா! பீகாரின் புதிய முதல்வர்?

பாட்னா, ஏப். 14–

நிதிஷ் குமார் இன்று பீகார் முதல்வர் பதவியை ராஜினாமா செய்ய உள்ளார். பீகாரின் புதிய முதல்வர் யார் என்ற அறிவிப்பை பாஜ இன்று வெளியிட உள்ளது. பீகார் சட்டப்பேரவைக்கு கடந்த 2025ம் ஆண்டு நவம்பர் மாதம நடந்த தேர்தலில் பாஜ தலைமையிலான ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி அமோக வெற்றி பெற்று ஆட்சியை தக்க வைத்து கொண்டது. 243 பேர் கொண்ட பீகார் பேரவையில் 202 உறுப்பினர்களுடன் தேசிய ஜனநாயக கூட்டணி பெரும்பான்மை பலத்துடன் உள்ளது. இதில், பாஜ 89 உறுப்பினர்களுடனும், ஐக்கிய ஜனதா தளம் 85 உறுப்பினர்களுடனும் உள்ளன. மேலும் சிறிய கட்சிகள் கூட்டணியில் உள்ளன. ஐக்கிய ஜனதா தள தலைவர் நிதிஷ் குமார் முதல்வராக பதவி ஏற்றார். ஆனால் பீகார் அரசியலிலில் கடந்த சில மாதங்களுக்கு முன் திடீர் திருப்பம் ஏற்பட்டது. ஏற்கனவே மாநிலங்களவை உறுப்பினராக விருப்பம் தெரிவித்து வந்த



முதல்வர் நிதிஷ் குமார் பீகாரில் இருந்து மாநிலங்களவைக்கு நடந்த தேர்தலில் வேட்பு மனு தாக்கல் செய்தார். அந்த தேர்தலில் வெற்றி பெற்ற நிதிஷ் குமார் கடநத வாரம் மாநிலங்களவை உறுப்பினராகவும் பதவி ஏற்று கொண்டார். இதையடுத்து நிதிஷ் குமார் முதல்வர் பதவியை ராஜினாமா செய்வார் என்றும், பேரவையில் பெரும்பான்மையுடன் உள்ள பாஜவை சேர்ந்த ஒருவர் மாநில முதல்வராக தேர்ந்தெடுக்கப்படுவார் எனவும் செய்திகள் வெளியாகி வருகின்றன. இதனிடையே, நிதிஷ் குமாரின் மகன் நிஷாந்த் குமார் ஐக்கிய ஜனதா தள கட்சியில் அதிகாரபூர்வமாக இணைந்தார். அவருக்கு பீகார் துணை முதல்வர் பதவி வழங்கப்படும் எனவும் தகவல்கள் வெளியாகி வருகின்றன. இத்தகைய பரபரப்பான சூழலில் பீகார் அமைச்சரவை கூட்டம் இன்று நடைபெற உள்ளது. இதில் பங்கேற்ற பிறகு நிதிஷ் குமார் தனது ராஜினாமா கடிதத்தை ஆளுநர் சையத் அடா ஹஸ்னைனிடம் அளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே, பீகாரில் முதன்முறையாக பாஜ முதல்வர் பதவியை பெற உள்ள நிலையில், தனது கட்சியின் மத்திய பார்வையாளராக ஒன்றிய அமைச்சரும், மத்தியபிரதேச முன்னாள் முதல்வருமான சிவராஜ் சிங் சவுகானை பாஜ ஆட்சி மன்ற குழு நியமித்துள்ளது. இதையடுத்து இன்று பாட்னா வரவுள்ள சிவ்ராஜ் சிங் சவுகானை பாஜ தலைவர்கள் சந்தித்து பேச உள்ளனர். அதன்பின் பீகாரின் புதிய முதல்வர் யார் என்ற அறிவிப்பு வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதுதொடர்பாக பீகார் அமைச்சரும், அம்மாநில பாஜ முன்னாள் தலைவருமான திலீப் ஜெய்ஸ்வால் செய்தியாளர்களிடம் கூறுகையில், "அடுத்த முதல்வர் யாரென்பதை கட்சியின் மத்திய தலைமை முடிவு செய்யும். அதுவரை எந்த ஊகங்களுக்கு பதில் சொல்ல முடியாது. ஆனால் முதல்வர் பதவிக்கான போட்டியில் நான் இல்லை" என்றார். பீகார் முதல்வருக்கான போட்டியில் துணை முதல்வர் சாம்ராட் சவுத்ரி, ஒன்றிய உள்துறை இணையமைச்சர் நித்யானந்த ராய், பீகார் அமைச்சர்கள் லாகேந்திர பாஸ்வான் மற்றும் ஸ்ரேயசி சிங் ஆகியோரும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



## டில்லியில் துணை ஜனாதிபதி சிபிஆர் இல்லத்தில் பிரதமர் மோடி தமிழ் புத்தாண்டு கொண்டாட்டம்!

புதுடெல்லி, ஏப். 14–

துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் இல்லத்தில் பிரதமர் மோடி தமிழ் புத்தாண்டு கொண்டாடினார்.

டில்லியில் உள்ள துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷணன் இல்லத்திற்கு பிரதமர் மோடி சென்றார். அவர் ராதாகிருஷ்ணனை சந்தித்து தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள் தெரிவித்தார். பிறகு அவரது இல்லத்தில் உள்ள பூஜை அறையில் வழிபாட்டிலும் ஈடுபட்டார். பிரதமர் மோடிக்கு முருகப்பெருமான் புகைப்படத்தை சி.பி.ராதாகிருஷ்ணன் பரிசளித்தார்.

## நீதியை நிலைநாட்டுவோம்! அம்பேத்கர் பிறந்தநாளில் முதல்வர் ஸ்டாலின் புகழஞ்சலி!!

வேலூர், ஏப். 14–

வேலூரில் பிரசாரம் மேற்கொண்ட முதல்வர் ஸ்டாலின், கே.வி. குப்பத்தில் உள்ள அம்பேத்கர் சிலைக்கு கீழே வைக்கப்பட்டிருந்த அம்பேத்கரின் உருவப்படத்துக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

தமிழ்நாட்டில் தேர்தலுக்கான தேதிகள் அறிவிக்கப்பட்ட நிலையில், தேர்தல் பணிகள் மிகத் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. தேர்தலையொட்டி, முதல்வரும், திமுக தலைவருமான ஸ்டாலின் மாநிலம் முழுவதும் பிரசாரம் மேற்கொண்டுள்ளார். அதன் ஒருபகுதியாக வேலூர் மாவட்டம் கே.வி. குப்பத்தில், இன்று (ஏப். 14) காலை நடைப்பயிற்சி மேற்கொண்ட அவர் வீடு



வீடாகச் சென்று வாக்கு சேகரித்தார்.

அதனைத் தொடர்ந்து அண்ணல் அம்பேத்கர் பிறந்தநாளான சமத்துவ நாளையொட்டி கே.வி. குப்பத்தில் உள்ள அம்பேத்கர் உருவச் சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தியதோடு, அவரது சிலைக்கு கீழ் வைக்கப்பட்டிருந்த அண்ணல் அம்பேத்கரின் திருவுருவப் படத்திற்கும் மலர்தூவி மரியாதை செலுத்தினார். இதுதொடர்பாக முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவு ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

### ஹார்முஸ் ஜலசந்தியை மூடிய அமெரிக்கா

# கச்சா எண்ணெய் விலை உயர்வு! சுமார் 3,200 சரக்கு, எண்ணெய் கப்பல்கள்,

### 20,000– மாலுமிகள், ஊழியர்கள் பரிதவிப்பு!!


வாஷிங்டன், ஏப். 14–

ஹார்முஸ் ஜலசந்தியை மூடிவிட்டோம் என்று அமெரிக்க ராணுவம் அறிவித்து உள்ளது. இதனால் கச்சா எண்ணெய் விலை 8 சதவீதம் வரை உயர்ந்துள்ளது.

கடந்த பிப்.28–ம் தேதி முதல் அமெரிக்கா – ஈரான் இடையே போர் நடைபெற்று வந்தது. கடந்த 8–ம் தேதி இருதரப்பிலும் 2 வாரங்களுக்கு போர் நிறுத்தம் அமல் செய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாக கடந்த 11–ம் தேதி பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. சுமார் 21 மணி நேரம் நீடித்த இந்த பேச்சுவார்த்தை தோல்வியில் முடிந்தது. இதையடுத்து, "ஹார்முஸ் ஜலசந்தியை மூடும் நடவடிக்கை விரைவில் தொடங்கப்படும்" என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தெரிவித்தார். இதுகுறித்து அமெரிக்க ராணுவம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: அதிபர் ட்ரம்ப்பின் உத்தரவை ஏற்று அமெரிக்க நேரத்தின் படி ஏப்.13–ம் தேதி காலை 10 மணிக்கு (இந்திய நேரப்படி ஏப்.13 இரவு 7.30) ஹார்முஸ் ஜலசந்தி மூடப்படும். இதன்பிறகு ஈரான் துறைமுகங்களில் இருந்து வரும் அனைத்து கப்பல்களும் தடுத்து நிறுத்தப்படும். மற்ற நாடுகளின் துறைமுகங்களில் இருந்து வரும் கப்பல்களை தடுக்க மாட்டோம். அவை வழக்கம்போல கடந்து செல்லலாம்.

இவ்வாறு அமெரிக்க ராணுவம் தெரிவித்துள்ளது. இந்திய நேரப்படி ( 13.04.2026)இரவு 7.30 மணிக்கு ஹார்முஸ் ஜலசந்தியின் இருபுறங்களையும் அமெரிக்க போர்க்கப்பல்கள் சுற்றி வளைத்தன. அமெரிக்காவின் கண்காணிப்பை மீறி ஈரானில் இருந்து வரும் எந்த கப்பலும் ஹார்முஸ் ஜலசந்தியை கடக்க முடியாது என்று ராணுவம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஆபிரகாம் லிங்கன், ஜெரால்டு ஆர் போர்டு, ட்ரிபோலி உட்பட23 போர்க்கப்பல்கள் மற்றும் 2 நீர்மூழ்கி கப்பல்கள் மத்திய கிழக்கு பகுதியில் முகாமிட்டு உள்ளன. இந்த போர்க் கப்பல்கள், நீர்மூழ்கி கப்பல்கள் மூலம் ஹார்முஸ் ஜலசந்தியின் இருபுறமும்




தடுப்பு வேலி அமைக்கப்படும். இவை தவிர 10 கண்காணிப்பு ட்ரோன்கள், கண்காணிப்பு விமானங்களும் ஹார்முஸ் ஜலசந்தியில் கண்காணிப்பு பணியில் ஈடுபடும். அமெரிக்க கடற்படையின் 3 கப்பல்கள் ஹார்முஸ் பகுதியில் கண்ணிவெடிகளை அகற்றும் பணியை தொடங்கி உள்ளன. மேலும் 2 கப்பல்கள் ஜப்பானில் இருந்து ஹார்முஸ் பகுதிக்கு வருகின்றன. அந்த கப்பல்களும் கண்ணி வெடியை அகற்றும் பணியில் ஈடுபடுத்தப்படும் என்று அமெரிக்க ராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. 'ட்ரம்ப் உத்தரவிட்டால், அடுத்த நொடியே ஈரான் மீது மிகப்பெரிய தாக்குதல்களை நடத்த தயாராக இருக்கிறோம்' என்று இஸ்ரேல் ராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதற்கிடையே, ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டதால், கச்சா எண்ணெய் விலை 8 சதவீதம் வரை உயர்ந்துள்ளது. சர்வதேச சந்தையில் நேற்று முன்தினம் ஒரு பேரல் கச்சா எண்ணெய் 96.57 டாலருக்கு விற்கப்பட்டது. ஜலசந்தி மூடலால் நேற்று (13.04.2026)ஒரு பேரல் கச்சா எண்ணெய் 105 டாலருக்கு விற்கப்ப ட்டது. விலை மேலும் உயரும் அபாயம்: "அமெரிக்கா தனது தடையை முழுமையாக நடைமுறைப்படுத்தினால் எண்ணெய் விலை பேரலுக்கு 140 முதல் 150 டாலர் வரை உயரக் கூடும். ஹார்முஸ் ஜலசந்தியை அமெரிக்கா முற்றுகையிட்டிருப்பது, ஒரு பிராந்திய மோதலை உலகளாவிய போராகமாற்றக்கூடும். இதன் மூலம் ஒரு நாளுக்கு 12 மில்லியன் பேரல் எண்ணெய் விநியோகம் பாதிக்கப்படலாம்" என்று ஓனிக்ஸ் கேபிடல் நிர்வாக இயக்குநர் ஜார்ஜ் மான்டேபெக் கூறியுள்ளார்.

**அதிபர் ட்ரம்ப் எச்சரிக்கை:**

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் சமூக வலைதளத்தில் நேற்று வெளியிட்ட பதிவில், 'ஹார்முஸ் ஜலசந்தியை நாங்கள் மூடி விட்டோம்.

எங்களால் தடை செய்யப்பட்ட பகுதிக்குள் ஈரான் கப்பல்கள் நுழைந்தால், அவை தகர்க்கப்படும்' என்று தெரிவித்துள்ளார். "ஒருவேளை ஈரானுக்கு சீனா ஆயுதங்கள் வழங்குவது உறுதி செய்யப்பட்டால் சீன பொருட்க ளுக்கு 50 சதவீத வரி விதிக்கப்படும்" என்றும் அவர் கூறியுள்ளார். இந்திய கப்பல்களுக்கு.. ஹார்முஸ் ஜலசந்தியை கடக்க ஈரான் ராணுவ தரப்பில் சுங்க கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதுகுறித்து இந்தியாவுக்கான ஈரான் தூதர் முகமது பதாலி டெல்லியில் நேற்று( 13.04.2026) கூறும்போது, "இந்திய கப்பல்களுக்கு நாங்கள் சுங்க கட்டணம் வசூலிப்பது கிடையாது. இதை நீங்கள் இந்திய அரசிடமே நேரடியாக கேட்டு தெரிந்து கொள்ளலாம். இக்கட்டான சூழலிலும் இந்தியா – ஈரான் இடையிலான உறவு வலுவாக இருக்கிறது. ஹார்முஸ் ஜலசந்தியை இந்திய கப்பல்கள் எவ்வித பிரச்சினையும் இன்றி கடந்து செல்ல அனுமதி வழங்கப்படும். ஈரானின் நம்பகமான நட்பு நாடுகளில் இந்தியாவும் ஒன்று" என்று தெரிவித்தார்.

ஈரான் துறைமுகங்களில் இருந்து புறப்படும் எண்ணெய் கப்பல்களை மட்டுமே தடுத்து நிறுத்துவோம் என்று அமெரிக்கா அறிவித்துள்ளது. வளைகுடா நாடுகளிடம் இருந்து இந்தியா அதிக அளவில் கச்சா எண்ணெய், எரிவாயுவை இறக்குமதி செய்கிறது. எனவே அங்கிருந்து புறப்படும் இந்திய கப்பல்கள் எவ்வித தடையும் இன்றி ஹார்முஸ் ஜலசந்தியை கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஈரான் மற்றும் அமெரிக்காவின் ராணுவ நடவடிக்கைகளால் ஹார்முஸ் ஜலசந்தியை கடக்க முடியாமல் சுமார் 3,200 சரக்கு, எண்ணெய் கப்பல்கள் பரிதவித்து வருகின்றன. இந்த கப்பல்களில் 20,000–க்கும் மேற்பட்ட மாலுமிகள், ஊழியர்கள் உள்ளனர். ஐக்கிய அரபு அமீரகத்தின் ரஸ் அல்–கைமா துறைமுகம் அருகே ஒரு சரக்கு கப்பல் நீண்ட நாட்களாக நிறுத்தப்பட்டிருக்கிறது.

## மத்திய கிழக்கு துறைமுகங்களை தாக்குவோம்: ஈரான் பகிரங்க எச்சரிக்கை!

டெஹ்ரான், ஏப். 14–

ஈரான் துறைமுகங்கள் தாக்கப்பட்டால் மத்திய கிழக்கு நாடுகளின் துறைமுகங்களை தாக்குவோம் என்று ஈரான் ராணுவம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக ஈரான் ராணுவ மூத்த தளபதி லெப்டினென்ட் கர்னல் இப்ராகிம் ஸோல்பகாரி டெஹ்ரானில் ( 13.04.2026) கூறியதாவது: எங்கள் எதிரிகளின் கப்பல்கள் ஹார்முஸ் ஜலசந்தியை கடக்க அனுமதி வழங்கமாட்டோம். இந்த ஜலசந்தி தொடர்ந்து எங்களின் கட்டுப்பாட்டில் மட்டுமே இருக்கும். சர்வதேச சட்ட விதிகளுக்கு எதிராக அமெரிக்க ராணுவம் செயல்பட்டு வருகிறது. ஹார்முஸ் ஜலசந்தியை மூடுவோம் என்று அமெரிக்கா அறிவித்திருப்பது, கடல் கொள்ளைக்கு சமம் ஆகும். ஈரான் துறைமுகங்கள் தாக்கப்பட்டால் பெர்சிய வளைகுடா,



ஓமன் கடல் பகுதி யில் உள்ள அனைத்து துறைமுகங்களின் பாதுகாப்பு கேள்விக் குறியாகும். எங்கள் துறைமுகங்கள் குறிவைக்கப்பட்டால், மத்திய கிழக்கு நாடுகளின் துறைமுக ங்களை மிகக் கடுமையாக தாக்குவோம். இவ்வாறு இப்ராகிம் தெரிவித்தார்.

போர் மூளும் அபாயம்:

இதுதொடர்பாக சர்வதேச பாதுகாப்பு நிபுணர்கள் கூறியதாவது: ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் அமெரிக்க போர்க்கப்பல்கள் நுழைந்தால் மோசமான விளைவுகள் ஏற்படும். அமெரிக்கா, ஈரான் இடையேயான போர் நிறுத்தம் முடிவுக்கு வந்து மீண்டும் மிகப்பெரிய அளவில் போர் மூளும். ஈரான் ராணுவத்திடம் மிகப்பெரிய போர்க்கப்பல்கள் இல்லை. ஆனால் 5,000–க்கும் மேற்பட்ட அதிவிரைவு போர் படகுகள் உள்ளன. இந்த படகுகள் மூலம் ஈரான் ராணுவம் கொரில்லா தாக்குதல்களை மேற்கொள்ளும்.

மேலும் கடல் கண்ணி வெடிகள், ட்ரோன்கள், ஏவுகணைகள் மூலமும் அமெரிக்க போர்க்கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்படக்கூடும். ஈரான் எல்லையில் இருந்து 10 மைல் தொலைவு வரையிலான பகுதிக்குள் நுழையும் போர்க்கப்பல்கள், எதிரிகளின் கப்பல்கள் மீது தாக்குதல் நடத்த அந்த நாட்டு ராணுவ தலைமை ஏற்கெனவே உத்தரவு பிறப்பித்து உள்ளது. இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தலையங்கம்
மதுரை மணி
செவ்வாய்க்கிழமை 14.04.2026
விசுவாவசு தமிழ் வருடம்
சித்திரை மாதம் 01-ம் தேதி

## வைரல் ஆகும் "ஸோம்பி "(Zombie) நபர்களின் வீடியோ உண்மையா?




சமீபத்திய நாட்களில் சமூக ஊடகங்களில் ஒரு விதமான வீடியோ வைரலாக பரவி வருகின்றது. அவற்றில் சில நபர்கள் ஒரே இடத்தில் மயங்கிய நிலையில் நிற்பதை காண முடிகின்றது. குறிப்பாக, பெங்களூருவில் இருந்து ஒரு காணொளி சமூக ஊடகங்களில் வேகமாகப் பரவி வருகிறது. அதில், பாகலூர் பகுதியில் உள்ள ஒரு கல்லூரிக்கு அருகில் சாலையோரத்தில் ஒரு இளைஞர் 'ஸோம்பி' போன்ற நிலையில் நிற்பது காணப்படுகிறது.

இந்தக் காணொளி வெளிவந்த உடனேயே, மக்கள் இதை ஸோம்பி டிரக், அதாவது ஸோம்பி போதைப்பொருள் என்று சொல்லப்படும் போதைப்பொருளுடன் தொடர்புபடுத்தத் தொடங்கினர். இருப்பினும், இந்தக் காணொளியில் கூறப்படும் ஸோம்பி போதைப்பொருள் குறித்த கூற்று தவறானது. வியாழக்கிழமையன்று, காவல்துறை ஆணையர் சீமந்த் குமார் சிங், அந்தக் காணொளி உண்மையில் ஒரு போலியான காணொளி என்று உறுதிப்படுத்தினார். அதைத் தொடர்ந்து, பெங்களூருவில் இருந்து மட்டுமல்லாமல், பீகார் மற்றும் சண்டிகரில் இருந்தும் இதேபோன்ற காணொளிகள் வெளிவந்தன.

இருப்பினும், பெங்களூரு வழக்கில், காவல்துறையினர் காணொளியில் காணப்பட்ட நபரைக் கண்டுபிடித்து அவருக்கு மருத்துவப் பரிசோதனை செய்தனர். இந்தப் பரிசோதனையில், அவர் எந்தவொரு செயற்கை போதைப்பொருளின் தாக்கத்திலும் இல்லை என்பது தெரியவந்தது. அந்த நபர் மூட்டுவலி மற்றும் சைனஸ் நோய்க்கான மருந்துகளுடன் மதுவையும் உட்கொண்டிருந்தார். இந்தக் கலவையே காணொளியில் சித்தரிக்கப்பட்ட நிலையை ஏற்படுத்தியிருக்கலாம்.

### Zombie Drug என்றால் என்ன?

'ஸோம்பி டிரக்' என்பது ஒரு அதிகாரப்பூர்வ மருத்துவச் சொல் அல்ல என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். அது எந்த ஒரு குறிப்பிட்ட வகை மருந்தையும் குறிக்கவில்லை. இது மனித நடத்தையை மிகவும் விசித்திரமாகவும் கட்டுப்படுத்த முடியாததாகவும் மாற்றும் அபாயகரமான போதைப்பொருட்களை விவரிக்கப் பயன்படுத்தப்படும் ஒரு பேச்சுவழக்குச் சொல் மட்டுமே. இந்த நிலையில், ஒரு நபர் ஒரு "ஸோம்பி"யைப் போலத் தோற்றமளிக்கத் தொடங்குகிறார்.

"ஸோம்பி டிரக்" என்று பொதுவாகக் குறிப்பிடப்படும் மருந்து சைலாசின் (Xylazine) ஆகும். உண்மையில், இது விலங்குகளுக்காக வடிவமைக்கப்பட்ட ஒரு மயக்க மருந்தாகும். இது சில பிராந்தியங்களில் பொழுதுபோக்கு மருந்தாக சட்டவிரோதமாகத் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது.

### உடலில் அதன் விளைவுகள் என்ன?

Xylazine மூளையின் நோரெபிநெஃப்ரின் அளவைக் குறைக்கிறது. ஊசி மூலம் செலுத்தப்படும்போது அல்லது நேரடியாக உட்கொள்ளப்படும்போது, அது சுவாசத்தை மெதுவாக்குகிறது, இதயத் துடிப்பைக் குறைக்கிறது, மற்றும் தசைகளை முற்றிலும் தளர்வடையச் செய்கிறது. இந்த நிலையில், ஒரு நபர் பல மணிநேரம் தொடர்ந்து "உறைந்த" நிலையில்—நின்றபடியோ அல்லது அமர்ந்தபடியோ—இருக்கலாம். கண்கள் திறந்திருந்தாலும் எந்தவிதமான எதிர்வினையையும் வெளிப்படுத்தாமல் இருக்கலாம்.

இதன் நீண்டகாலப் பயன்பாடு தோல் சிதைவுக்கும் (தோல் அழுகல்) மற்றும் திறந்த காயங்கள் உருவாவதற்கும் வழிவகுக்கிறது. மேலும், அளவுக்கு அதிகமாக இதை உட்கொள்வது சுவாச நிறுத்தம் மற்றும் மரணத்திற்கு வழிவகுக்கும். இதுபோன்ற சந்தர்ப்பங்களில், அளவுக்கு அதிகமான மருந்தின் விளைவுகளை மாற்றும் மருந்தான நலோக்சோன் கூட அதன் விளைவுகளை முழுமையாக முறியடிப்பதில் பயனற்றதாகி விடுகிறது.

### Xylazine எவ்வாறு தயாரிக்கப்படுகிறது?

Xylazine பொதுவாக வீரியம் மிக்க ஓபியாய்டான ஃபென்டானிலுடன் இணைக்கப்படுகிறது. சைலாசின் (Xylazine) முதன்மையாகக் குதிரைகள் மற்றும் கால்நடைகளை மயக்கமடையச் செய்வதற்காகவே உருவாக்கப்பட்டிருந்தாலும், போதை உணர்வின் கால அளவை நீட்டிக்கும் நோக்கில், இது சட்டவிரோத போதைப்பொருட்களுடன் கலந்து விற்பனை செய்யப்படுவது தற்போது அதிகரித்து வருகிறது. குறிப்பாக அமெரிக்காவில், இப்பொருள் பொதுவாக "Tranq" அல்லது "Tranq Dope" என்றே குறிப்பிடப்படுகிறது.

## சி.பி.எஸ்.இ. 9-ம் வகுப்பு பாடப் புத்தகங்கள்: என்.சி.இ.ஆர்.டி. வெளியீடு!




புதுடெல்லி, ஏப். 14–
மத்திய இடைநிலை கல்வி வாரியமான சி.பி.எஸ்.இ. பாடத்திட்டத்தில் பயிலும் மாணவர்களுக்கு, புதிய கல்விக் கொள்கையின்படி இந்த ஆண்டு, 9–ம் வகுப்பு பாடப்புத்தகங்கள் மாற்றப்பட்டுள்ளன.

கடந்த 1ம் தேதி முதல் புதிய கல்வியாண்டு துவங்கி உள்ள நிலையில், 9–ம் வகுப்பு பாட புத்தகங்கள் கிடைக்காதது சர்ச்சையானது. இதனையடுத்து பாட புத்தகங்கள் தயாரிப்பு பணி விறுவிறுப்பாக நடப்பதால், வரும் 15–ம் தேதிக்குள் விற்பனைக்கு வெளியிடப்படும் என என்.சி.இ.ஆர்.டி. தெரிவித்தது. இதனையடுத்து தற்போது ஆங்கிலம், ஹிந்தி ஆகிய மொழிகளுடன் அறிவியல் பாடத்துக்கான புத்தகங்களை என்.சி.இ.ஆர்.டி. டில்லியில் வெளியிட்டுள்ளது.

## விசிக தேர்தல் அறிக்கையை வெளியிட்டார் திருமாவளவன்!



சென்னை, ஏப். 14–
சட்டமன்ற தேர்தலுக்கான கொள்கை அறிக்கையை விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன் வெளியிட்டார். கொள்கை நிலைப்பாடுகளை முதன்மையாக வைத்து கொள்கை அறிக்கையாக வெளியிடுகிறோம். தேர்தல் நடைபெறும்போது நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடத்துவது அப்பட்டமானது. பன்மைத்துவத்தை சிதைக்கும் வகையில் பாஜக திட்டமிட்டு காய்களை நகர்த்தி வருகிறது. நாடாளுமன்ற சிறப்புக் கூட்டத் தொடரை ஒத்திவைக்க வேண்டும் என விசிக வலியுறுத்துகிறது.

16,17,18 ஆகிய தேதிகளில் நாடாளுமன்றத்தில் என்ன செய்யப் போகிறார்கள் எனத் தெரியவில்லை. 3 நாட்களும் எதை விவாதிக்கப் போகிறோம் என்பது குறித்து பாஜக அரசு இதுவரை அறிவிக்கவில்லை. 5 மாநில சட்டமன்றத் தேர்தல் நடக்கும் நேரத்தில் கூட்டத் தொடரை நடத்துவதால் ஐயம் ஏற்படுகிறது என்று கூறினார். தொடர்ந்து பேசிய அவர்;

தமிழ்நாட்டில் இருமொழி கொள்கையை வலியுறுத்துகிறோம். தேர்தலின்போது நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடத்துவது மரபுக்கு எதிரான நடவடிக்கை பாஜகவின் பாசிச நடவடிக்கைக்கு எதிராக எங்களின் நிலைப்பாட்டை அறிவித்திருக்கிறோம்

சட்டமன்றம், நாடாளுமன்றத்தில் மகளிருக்கான இடஒதுக்கீட்டை 50 சதவீதமாக உயர்த்த வேண்டும்

சிறுபான்மையினரை பாதுகாக்க சிறப்பு சட்டம் இயற்ற வேண்டும்.

ஆணவக்கொலையை தடுக்க ஒன்றிய, மாநில அரசுகள் சிறப்பு சட்டம் இயற்ற வேண்டும் என்று கூறினார். தேர்தல் ஆணையம் சுதந்திரமாக செயல்படவில்லை. தமிழ்நாடு தலைமைச் செயலாளர் மாற்றத்துக்கு திருமாவளவன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

## ஐபிஎல் போட்டியை காண செல்பவர்கள் மெட்ரோ ரயிலில் இலவசமாக பயணிக்கலாம்!



சென்னை, ஏப். 14–
ஐபிஎல் போட்டியை காண செல்பவர்களுக்கு மெட்ரோ ரயிலில் இலவசமாக பயணிக்கலாம் என மெட்ரோ நிர்வாகம் தெரிவித்துள்ளது. சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகள் இடையிலான ஐபிஎல் லீக் போட்டி இன்று (ஏப்ரல்.14) நடைபெற உள்ளது. ஸ்பான்சர் செய்யப்பட்ட ஐபிஎல் போட்டிகான பயணச்சீட்டு வைத்திருப்பவர்கள், பயணச்சீட்டுகளில் உள்ள தனித்துவமான க்யூஆர் குறியீட்டை தானியங்கி நுழைவு இயந்திரத்தில் ஸ்கேன் செய்து மெட்ரோவில் பயணிக்கலாம். இந்த சிறப்பு சலுகை ஒரு சுற்றுப் பயணத்திற்கு (2 நுழைவு மற்றும் 2 வெளியேறுதல்) பயன்படுத்தலாம். சென்னையில் செயல்பாட்டில் உள்ள எந்த மெட்ரோ ரயில் நிலையத்திலிருந்தும் போட்டி நடைபெறும் மைதானத்திற்கு அருகிலுள்ள அரசினர் தோட்டம் மெட்ரோ ரயில் நிலையத்திற்கு இடையே மெட்ரோ ரயிலில் எந்தவித கட்டணமும் இல்லாமல் பயணிக்கலாம்.

அரசினர் தோட்டம் மெட்ரோ ரயில் நிலையத்திலிருந்து நீட்டிக்கப்பட்ட சிறப்பு மெட்ரோ ரயில் சேவை குறித்த விவரங்கள்: * அரசினர் தோட்டம் மெட்ரோ நிலையத்திலிருந்து விம்கோ நகர் பணிமனை மற்றும் விமான நிலைய மெட்ரோ நிலையங்களை நோக்கிச் செல்லும் கடைசி மெட்ரோ ரயில் நள்ளிரவு 1 மணிக்கு புறப்படும்.

* பச்சை வழித்தடத்தில் (வழித்தடம் 2) உள்ள மெட்ரோ ரயில் நிலையங்களுக்கு செல்லும் பயணிகள் புரட்சித்தலைவர் டாக்டர். எம்.ஜி. ராமச்சந்திரன் சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் மட்டுமே வழித்தடம் மாற்றம் செய்து கொள்ளலாம்.

## திருச்செந்தூரில் சித்திரை விசு கனி! ஆயிரக்கணக்கானோர் சுவாமி தரிசனம்!!



திருச்செந்தூர், ஏப். 14–
திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் தமிழ்ப் புத்தாண்டையொட்டி ஆயிரக்கணக்கான பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர்.

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் சித்திரை முதல் நாள் தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு இன்று அதிகாலை 4 மணிக்கு நடைதிறக்கப்பட்டு, 4.30 மணிக்கு விஸ்வரூப தரிசனம் நடைபெற்றது. பிறகு உதயமார்த்தாண்ட அபிஷேகம், தொடர்ந்து உச்சிகால அபிஷேகமும், காலை 10 மணிக்கு சண்முகருக்கு அன்னாபிஷேகம் நடந்தது. தொடர்ந்து மற்ற கால பூஜைகளும் நடைபெற்றன.

சித்திரை முதல் நாளை முன்னிட்டு அதிகாலை முதலே ஆயிரக்கணக்கான பக்தர்கள் கடல் மற்றும் நாழிக்கிணறில் புனித நீராடி சுவாமி தரிசனம் செய்தனர்.

புத்தாண்டு சிறப்புப் பூஜைகளுக்கான ஏற்பாடுகளை தக்கார் அருள்முருகன், இணை ஆணையர் ராமு மற்றும் பணியாளர்கள் செய்திருந்தனர்.

சித்திரை விசு கனி : திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் உள் பிரகாரத்தில் சித்திரை விசு கனி காணும் நிகழ்ச்சியை முன்னிட்டு கண்ணாடி முன்பு கனிகள் வைக்கப்பட்டிருந்ததை பக்தர்கள் வழிபட்டுச் சென்றனர்.



அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழக பொதுச்செயலாளரும், தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், முன்னாள் முதலமைச்சருமான புரட்சித்தமிழர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி, அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 136– பிறந்தநாளையொட்டி, செவ்வாய்க்கிழமை, திண்டுக்கல்லில் அம்பேத்கர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.


## டான்செட், சீட்டா நுழைவுத் தேர்வுக்கு விண்ணப்பிக்க அவகாசம் நீட்டிப்பு!



சென்னை, ஏப். 14–
டான்செட், சீட்டா நுழைவுத் தேர்வுக்கு ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி தேதி ஏப்ரல் 15 வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக அண்ணா பல்கலைக் கழகம் அறிவித்துள்ளது. டான்செட், சீட்டா நுழைவுத் தேர்வுகளுக்கான அறிவிப்பு கடந்த மார்ச் 16ம் தேதி வெளியிடப்பட்டு அன்றைய தினமே ஆன்லைன் விண்ணப்பப் பதிவு தொடங்கியது.

விண்ணப்பிக்க கடைசி நாள் ஏப்ரல் 10ம் தேதி என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், கடைசி தேதி ஏப்ரல் 15 வரை நீட்டிக்கப்பட்டிருப்பதாக அண்ணா பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது. டான்செட், சீட்டா நுழைவுத் தேர்வெழுத விரும்பும் மாணவர்கள் அண்ணா பல்கலைக்கழகத்தின் இணையதளத்தை (www.annauniv.edu) பயன்படுத்தி ஏப்ரல் 15 வரை விண்ணப்பிக்கலாம். ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி, டான்செட் நுழைவுத்தேர்வு மே 9ம் தேதியும், சீட்டா நுழைவுத் தேர்வு மே 10ம் தேதியும் நடைபெற உள்ளன.

## ஜனநாயகன் லீக்: நஷ்டத்தை சமாளிக்க விஜய் மீண்டும் படத்தில் நடிக்க முடிவு?



சென்னை, ஏப். 14–
தயாரிப்பாளருக்கு ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு செய்வதற்காக விஜய் ஒரு முக்கிய முடிவு எடுத்துள்ளதாக கூறப்படுகிறது. அதாவது ஜனநாயகன் படத்தை தயாரித்த கே.வி.என் நிறுவனத்திற்கு மேலும் ஒரு புதிய படத்தில் நடித்துக் கொடுத்து விஜய் முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது. அந்தப் படம் தான் விஜயின் கடைசி படமாக இருக்கும் எனவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. அந்த வகையில் உருவாக உள்ள புதிய படமானது விஜய்யின் 70–வது படமாக இருக்கும் என கூறப்படுகிறது. இந்த தகவல் திரையுலகில் மட்டுமல்லாது, அரசியல் வட்டாரத்தையும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி இருக்கிறது.

## அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை...!



ஒடுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்கள் வாழ்வை, இந்தியாவில் சட்டபுத்தகம் மூலம் உறுதிசெய்து தந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 136–வது பிறந்தநாளான இன்று, ராசிபுரம் சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் மா.மதிவேந்தன் மற்றும் நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளர் கே.ஆர்.என்.இராஜேஸ்குமார் MP., அவர்களும், அம்பேத்கரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தோம். நிகழ்ச்சியில் மாவட்ட பொருளாளர் அண்ணன் திரு. AK. பாலச்சந்தர், நகர கழக செயலாளர் அண்ணன் திரு. NR. சங்கர், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாவட்ட செயலாளர் திரு. மகேந்திரன், தங்கதுரை, மணிகண்டன் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



## சுக்கிரப் பெயர்ச்சி... இந்த ராசிகளுக்கு பணம் ,அதிர்ஷ்டம் பெருகும்..!




சுக்கிரன் என்பது செல்வம், அன்பு, அழகு மற்றும் ஆடம்பரத்திற்கு உரிய கோளாகும். ஒருவரின் ஜாதகத்தில் சுக்கிரன் சுபமான இடங்களில் அமைந்திருந்தால், அவர்கள் நல்வாய்ப்புகளால் ஆசீர்வதிக்கப்படுவார்கள். இருப்பினும், சில சமயங்களில் சுக்கிரனின் பெயர்ச்சியும் அதிர்ஷ்டத்தைக் கொண்டுவரும். மே 8–ஆம் தேதியன்று, சுக்கிரன் மிருகசீரிஷ நட்சத்திரத்திற்குப் பெயர்ச்சி அடைகிறார். இந்தப் பெயர்ச்சி சில ராசிக்காரர்களுக்கு எதிர்பாராத நன்மைகளைக் கொண்டுவரும். இப்போது, அந்த ராசிகள் எவை என்பதைப் பார்ப்போம்.

**ரிஷபம்:** சுக்கிரனின் இந்தப் பெயர்ச்சி ரிஷப ராசிக்காரர்களுக்கு அனைத்து வகையிலும் நன்மையளிக்கும். இது அவர்கள் கடன்களிலிருந்து விரைவாக விடுபட உதவும். முதலீடுகள் லாபகரமாக அமையும். அவர்கள் தாங்கள் திட்டமிட்ட பணிகளைச் சரியான நேரத்தில் முடிப்பார்கள். புதிய வாகனம் வாங்குவதற்கான வாய்ப்பு உள்ளது.

**மிதுனம்:** மிதுன ராசிக்காரர்களுக்குக் காதல் விவகாரங்கள் மிகவும் சிறப்பாக அமையும். திருமண முயற்சிகள் கைகூடும். பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. தொழில் செய்வோருக்கு அதிகபட்ச லாபம் கிடைக்கும். அனைத்து நிதிப் பிரச்சினைகளும் தீர்ந்து, அவர்கள் மிகவும் மகிழ்ச்சியான மற்றும் ஆனந்தமான வாழ்க்கையை வாழ்வார்கள்.

**துலாம்:** துலாம் ராசிக்காரர்கள் எதைத் தொட்டாலும் அது பொன்னாக மாறும். அவர்கள் தங்கள் பணிகள் அனைத்தையும் சரியான நேரத்தில் முடிப்பார்கள். வீடு மற்றும் வெளியிடம் என இரு இடங்களிலும் மகிழ்ச்சியான சூழல் நிலவும். பணியிடத்தில் பதவி உயர்வு கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது. அவர்கள் நிதி ரீதியாகப் பெரும் வெற்றியை அடைவார்கள்.

**கடகம்:** சுக்கிரனின் இந்தப் பெயர்ச்சி கடக ராசிக்காரர்களுக்கு அற்புதமான நன்மைகளைக் கொண்டுவரும். அவர்களின் செல்வம் இரட்டிப்பாகும். புதிய நபர்களைச் சந்திப்பது எதிர்காலத்தில் மிகவும் பயனுள்ளதாக அமையும். அதிகரித்த வருமானத்துடன் அவர்கள் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்வார்கள்.


## சினிமா துளிகள்..!

## தேர்தலுக்கு அடுத்த நாள் வெளியாகிறதா ஜனநாயகன் படம்?




விஜய் நடிப்பில் உருவாகி இருக்கக்கூடிய ஜனநாயகன் படம் இணையதளத்தில் வெளியானது. இது படக்குழுவினரையும் ரசிகர்களையும் அதிர்ச்சி அடைய வைத்தது. இந்த விவகாரம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. சைபர் கிரைம் காவல்துறையினரும் இது தொடர்பாக விசாரணையில் இறங்கினர். இதனை அடுத்து ஜனநாயகன் படத்தை இணையதளம் வாயிலாக பரவ விட்டதாக ஆறு பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில் ஏப்ரல் 17ஆம் தேதி அல்லது 24ஆம் தேதி ஏதேனும் ஒரு தேதியில் ஜனநாயகன் படத்தை வெளியிடப்பட திட்டமிட்டதாக தகவல் வெளியானது. ஏப்ரல் 23இல் தேர்தல் நடைபெற இருப்பதால் அதனை காரணம் காட்டி படத்திற்கு சிக்கல் வந்துவிடக்கூடாது என்பதற்காக வரும் 24ஆம் தேதி அதாவது சட்டமன்ற தேர்தலில் வாக்குப்பதிவு நடைபெறுவது 23ஆம் தேதி அதற்கு அடுத்த நாளான ஏப்ரல் 24ஆம் தேதி வெள்ளிக்கிழமை அன்று ஜனநாயகன் திரைப்படத்தை வெளியிட தயாரிப்பாளர் தரப்பு திட்டமிட்டுள்ளதாக சொல்லப்படுகிறது. இது தொடர்பாக விநியோகஸ்தர்களோடு தயாரிப்பாளர் தரப்பு ஏப்ரல் 17ஆம் தேதி ,முக்கிய ஆலோசனைக் கூட்டம் நடத்த இருக்கிறதாம். இந்த கூட்டத்தில் படத்தின் ரிலீஸ் தொடர்பான முக்கிய முடிவுகள் எடுக்கப்படும் என சொல்லப்படுகிறது. இரு தரப்பிலும் அனுமதி கிடைக்கும் பட்சத்தில் ஜனநாயகன் திரைப்படம் தேர்தலுக்கு அடுத்து நாளான ஏப்ரல் 24ஆம் தேதி திரையரங்குகளில் வெளியாகும் என தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.



## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்

# தினமும் நடைப்பயிற்சி செய்தும் ரிசல்ட் இல்லையா..?



இன்றைய காலத்தில் உடல் எடையை குறைக்க பலரும் கடுமையான உடற்பயிற்சிகள், டயட் திட்டங்கள் போன்றவற்றை முயற்சி செய்து வருகிறார்கள். இருப்பினும், சிலருக்கு அவை தொடர்ந்து செய்ய சிரமமாக இருக்கும். ஆனால், சிலருக்கு எவ்வளவு நடந்தாலும் உடல் எடை குறையாத நிலை காணப்படுகிறது. இது ஏன் நிகழ்கிறது என்ற கேள்விக்கு, நிபுணர்கள் பல காரணங்களை சுட்டிக்காட்டுகின்றனர்.

சரியான வேகத்தில் நடக்காமல் இருப்பது, குறைந்த நேரம் மட்டுமே நடைப்பயிற்சி செய்வது, நடைப்பயிற்சிக்குப் பிறகு அதிக கலோரி உணவுகளை உட்கொள்ளுவது போன்றவை உடல் எடையை குறைக்க தடையாகின்றன. மேலும், ஒரே மாதிரியான நடைப்பயிற்சியை தொடர்ந்து செய்வதால் உடல் அதற்கு பழகி, கலோரி எரிப்பு குறையும் என்றும் கூறப்படுகிறது. இதற்கு மேலாக, தூக்கக் குறைவு, மன அழுத்தம் மற்றும் சீரற்ற உணவுமுறை ஆகியவையும் உடல் எடை குறையாததற்கான முக்கிய காரணங்களாகும். சிலருக்கு உடல்நலக் கோளாறுகளும் இதற்கு காரணமாக இருக்கலாம்.

எனவே, நடைப்பயிற்சியை சரியான முறையில் மேற்கொள்வதுடன், சீரான உணவுமுறை, போதுமான ஓய்வு மற்றும் வாழ்க்கை முறையில் மாற்றங்கள் ஆகியவற்றையும் பின்பற்றினால்தான் உடல் எடையை திறம்படக் கட்டுப்படுத்த முடியும் என நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர்.

**தவறாக நடப்பது:** நடைப்பயிற்சி செய்வதன் மூலம் உடல் எடையை குறைக்க முடியும் என்றாலும், அதை சரியான முறையில் செய்யாதது எதிர்பார்த்த பலனைத் தடுக்கிறது என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். அவர்களின் கூற்றுப்படி, பலர் நடக்கும் போது கால்களை முழுமையாக அசைக்காமல், சோர்வாக அல்லது பாதி முயற்சியுடன் நடப்பது வழக்கமாக உள்ளது. இதனால் உடலில் கலோரி எரிப்பு குறைந்து, உடல் எடை குறையாமல் போகிறது.

**நடக்கும் போது கைப்பேசி:** மேலும், நடைப்பயிற்சியின் போது கைபேசியைப் பயன்படுத்துவது இன்னொரு பெரிய தவறாகக் கூறப்படுகிறது. பலர் நடக்கும் போது தொடர்ந்து மொபைலைப் பார்ப்பது காரணமாக, உடல் நிலை (posture) பாதிக்கப்படுகிறது. இதனால் கழுத்து மற்றும் தோள்பட்டை வலி போன்ற பிரச்சனைகள் உருவாகும் அபாயம் உள்ளது. எனவே, நடைப்பயிற்சியின் முழு பயனைப் பெற வேண்டுமெனில், சரியான உடல் நிலை, முழுமையான கால்வழி இயக்கம் மற்றும் கவனச்சிதறல் இல்லாத நடைப்பயிற்சி அவசியம் என நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர்.

**மெதுவான நடை:** உடல் எடையைக் குறைக்க நடைப்பயிற்சி செய்வோர் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சங்களில் ஒன்று நடை வேகம் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர். மெதுவாக நடப்பது உடலுக்கு சற்று பயன் அளித்தாலும், அதிக அளவில் கலோரி எரிக்காது என்பதால், எடை குறைதலில் அது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தாது.

பலர் சீராக நடைப்பயிற்சி மேற்கொண்டாலும், வேகம் குறைவாக இருப்பதால் எதிர்பார்த்த பலனை அடைய முடியாமல் போகிறது. மெதுவான நடை, உடலை அதிகமாக சவாலுக்கு உட்படுத்தாது என்பதால், கலோரி எரிப்பு குறைந்த அளவிலேயே நடைபெறுகிறது.எனவே, உடல் எடையை குறைக்க விரும்புவோர் சற்று வேகமாக (brisk walking) நடப்பது அவசியம் என நிபுணர்கள் பரிந்துரைக்கின்றனர். இதன் மூலம் இதய துடிப்பு அதிகரித்து, கலோரி எரிப்பு மேம்பட்டு, எடை குறைதல் சாத்தியமாகும்.

**தண்ணீரை தவிர்ப்பது:** நம் உடலின் செயல்பாடுகளுக்கு தண்ணீர் அத்தியாவசியமானது. போதுமான அளவு தண்ணீர் குடிக்காமல் இருந்தால், உடலில் நீர்ச்சத்து குறைந்து, மெட்டாபாலிசம் மந்தமாகும். இதனால் கலோரி எரிப்பு குறைந்து, உடல் எடை குறைதல் தடைப்படும். எனவே, நடைப்பயிற்சி செய்பவர்கள் தினமும் போதுமான அளவு தண்ணீர் குடிப்பதுடன், இளநீர், பழச்சாறு போன்றவற்றையும் சேர்த்து எடுத்துக்கொள்வது உடலின் எலக்ட்ரோலைட் சமநிலையை பராமரிக்க உதவும் என நிபுணர்கள் கூறுகின்றனர்.

**ஒரே இடத்தில் நடத்தல்:** பலர் தினமும் ஒரே இடத்தில் அல்லது ஒரே பாதையில் நடப்பது வழக்கம். இதனால் உடலில் ஒரே தசைகள் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. இதன் விளைவாக, கலோரி எரிப்பு குறைந்து, எடை குறைதல் மந்தமாகிறது. எனவே, நடைப்பயிற்சியில் மாற்றம் கொண்டு வருவது அவசியம். வெவ்வேறு பாதைகள், மேடு–பள்ளமான நிலங்கள், வேக மாற்றங்கள் போன்றவற்றைச் சேர்த்தால், உடலின் பல தசைகள் செயல்படும். இது கலோரி எரிப்பை அதிகரித்து, உடல் எடையை குறைக்க உதவும். மொத்தத்தில், நடைப்பயிற்சியின் பயனை முழுமையாகப் பெற வேண்டுமெனில், தண்ணீர் குடிக்கும் பழக்கம் முதல் நடை முறை வரை அனைத்திலும் கவனம் செலுத்துவது அவசியம் என நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர்.


## செய்தியாளர் / போட்டோ கிராபர் தேவை


மதுரை / சென்னை ஐயை மையமாக கொண்டு இயங்கிவரும் ஒரு பத்திரிகை நிறுவனத்திற்கு விளம்பர பிரிவில் பணிபுரிய துடிப்பும் /ஆர்வமும் /அனுபவமும் நிறைந்த செய்தியாளர்கள் / புகைப்பட கலைஞர்கள் தேவை.

தொடர்பு – 7904806432


# ரயில் பயணிகளுக்கு குட்நியூஸ்.. டிக்கெட் கட்டணம் குறைப்பு.. விவரம்!

சென்னை,ஏப். 14–

இந்திய ரயில்வே தனது RailOne செயலி மூலம் செய்யப்படும் முன்பதிவு செய்யப்படாத பயணச்சீட்டு முன்பதிவுகளுக்கு 3 சதவீத தள்ளுபடியை அறிமுகப்படுத்தியுள்ளது. டிஜிட்டல் முறையில் பணம் செலுத்துவதை ஊக்குவிப்பதையும், வழக்கமான பயணிகளுக்கு தினசரி ரயில் பயணத்தை சற்றே மலிவானதாக மாற்றுவதையும் இந்த நடவடிக்கை நோக்கமாகக் கொண்டுள்ளது.




இந்த புதிய ஏற்பாட்டின் கீழ், RailOne தளம் மூலம் முன்பதிவு செய்யப்படாத பயணச்சீட்டுகளை முன்பதிவு செய்யும் பயணிகள் 3 சதவீத தள்ளுபடியைப் பெறுவார்கள், ஆனால் பணம் டிஜிட்டல் முறைகள் மூலம் செலுத்தப்பட்டால் மட்டுமே இது பொருந்தும். இதில் UPI, டெபிட் கார்டுகள், கிரெடிட் கார்டுகள் மற்றும் நெட் பேங்கிங் ஆகியவை அடங்கும். ரொக்கமாகப் பணம் செலுத்துபவர்களுக்கு இந்த தள்ளுபடி பொருந்தாது.

இந்தச் சலுகை ஜூலை 14, 2026 வரை செல்லுபடியாகும்.RailOne செயலியானது பல ரயில்வே சேவைகளுக்கான ஒரே தளமாக வழங்கப்படுகிறது. பயணச்சீட்டு கவுண்டர்களுக்குச் செல்வதற்குப் பதிலாக அல்லது வெவ்வேறு சேவைகளுக்குத் தனித்தனி செயலிகளைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, பயணிகள் ஒரே இடத்தில் முன்பதிவுகளையும் கட்டணங்களையும் முடிக்க முடியும். முதல் பார்வையில், 3 சதவீத தள்ளுபடி என்பது பெரியதாகத் தோன்றாமல் இருக்கலாம். இருப்பினும், முன்பதிவு செய்யப்படாத பயணச்சீட்டுகளில் தினமும் பயணம் செய்யும் பயணிகளுக்கு, குறிப்பாகக் குறுகிய தூரங்களுக்கு, காலப்போக்கில் சேமிப்பு அதிகரிக்கும்.

# 8-வது ஊதியக்குழு: 34% சம்பள உயர்வு, லட்சங்களில் அரியர், குட் நியூஸ் சொன்ன நிபுணர்கள்!

சென்னை, ஏப். 14–

8வது ஊதியக்குழுவில் மத்திய அரசு ஊழியர்களுக்கு உள்ள முக்கிய எதிர்பார்ப்புகள் என்ன? நிபுணர்களின் கணிப்பு என்ன? முக்கிய அப்டேட்டை இந்த பதிவில் காணலாம்.




8–வது ஊதியக் குழுவின் கீழ் ஊழியர்களின் ஊதியம் எந்த அளவிற்கு உயரும் என்பது பெரிய அளவில் ஃபிட்மென்ட் ஃபாக்டரை சார்ந்திருக்கும். இந்த ஃபிட்மெண்ட் ஃபாக்டரின் மதிப்பு தற்போது உள்ளது போலவே 2.57 என நிர்ணயிக்கப்பட்டால், அடிப்படை ஊதியத்தில் சுமார் 30 முதல் 34 சதவீதம் வரையிலான உயர்வு ஏற்படக்கூடும்.

மத்திய அரசு ஊழியர்கள் மற்றும் ஓய்வூதியதாரர்கள் மத்தியில், 8–வது ஊதியக் குழு தொடர்பான விவாதங்கள் தொடர்ந்து ஒரு முக்கிய பேசுபொருளாக இருந்து வருகின்றன.

இந்த ஊதியக் குழுவின் பரிந்துரைகள் அமல்படுத்தப்ப டுவதன் மூலம், ஊழியர்களின் வருமானம் உயரும் என்றும் அதன் விளைவாக அவர்களுக்கு நேரடி நிதிப் பயன்கள் கிடைக்கும் என்றும் பரவலாக நம்பப்படுகிறது.

தற்போதைய நிலையில், ஃபிட்மெண்ட் ஃபாக்டர், ஊதியக் குழுவின் பரிந்துரைகளை அமல்படுத்துவதற்கான காலக்கெடு, எதிர்பார்க்கப்படும் சம்பள உயர்வுகள் மற்றும் அரியர் தொகையை வழங்குதல் போன்ற முக்கிய அம்சங்களிலேயே மத்திய அரசு ஊழியர்களின் கவனம் உள்ளது. ஊழியர்களுக்குக் கிடைக்கக்கூடிய பயன்களின் அளவை இறுதியில் தீர்மானிக்கப்போகும் காரணிகள் இவையே ஆகும். ஊதியக் குழு எத்தகைய காரணிகளைக் கருத்தில் கொள்ளும்?

தனது பரிந்துரைகளை வகுக்கும்போது, 8வது ஊதியக் குழு பல முக்கியக் காரணிகளைக் கருத்தில் கொள்ளும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நாட்டின் தற்போதைய பொருளாதார நிலை, பொருளாதார வளர்ச்சியின் வேகம், பல்வேறு அரசுத் திட்டங்களுக்கான நிதி இருப்பு மற்றும் ஓய்வூதியங்களுக்காக எதிர்பார்க்கப்படும் செலவினங்கள் ஆகியவை இக்காரணிகளில் அடங்கும்.

மேலும், தனது முடிவுகள் பல்வேறு மாநில அரசுகளின் நிதி ஆரோக்கியத்தின் மீது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதையும் இந்த ஊதியக் குழு மதிப்பிடும். அத்துடன், பொருத்தமான மற்றும் சமச்சீரான முடிவுகளை எடுப்பதற்கு ஏதுவாக, அரசு ஊழியர்களின் ஊதியம், சலுகைகள் மற்றும் பணிச்சூழல்கள் ஆகியவை குறித்த ஒப்பாய்வு ஒன்றும் மேற்கொள்ளப்படும்.

8–வது ஊதியக் குழுவின் கீழ் ஊழியர்களின் ஊதியம் எந்த அளவிற்கு உயரும் என்பது பெரிய அளவில் ஃபிட்மெண்ட் ஃபாக்டரை சார்ந்திருக்கும். இந்த ஃபிட்மெண்ட் ஃபாக்டரின் மதிப்பு தற்போது உள்ளது போலவே 2.57 என நிர்ணயிக்கப்பட்டால், அடிப்படை ஊதியத்தில் சுமார் 30 முதல் 34 சதவீதம் வரையிலான உயர்வு ஏற்படக்கூடும். இதன் விளைவாக, ஒட்டுமொத்த ஊதிய வரம்பானது சுமார் ₹46,260 முதல் ₹6,42,500 வரை விரிவடையக்கூ டும் என நிபுணர்கள் கருதுகிறார்கள்.

ஊதியக் குழு ஃபிட்மென்ட் ஃபாக்டரின் மதிப்பை 3.0 என நிர்ணயிக்க முடிவெடுத்தால், ஊதிய வரம்பானது ₹54,000 முதல் ₹7,50,000 –க்குள் உயரக்கூடும். மாறாக, இந்த மதிப்பு 3.25 என்ற அளவில் நிர்ணயிக்கப்பட்டால், ஊதிய வரம்பானது சுமார் ₹58,500 முதல் ₹8,12,500 –க்குளான அளவை எட்டக்கூடும். பொதுவாக, ஃபிட்மென்ட் ஃபாக்டரின் மதிப்பு அதிகமாக இருக்கும் பட்சத்தில், ஊழியர்களுக்குக் கூடுதல் நிதிப் பயன்கள் கிடைப்பதற்கான வாய்ப்புகளும் அதிகமாகவே இருக்கும். ஆகையால் இந்த காரணி மீது அனைவரின் கவனமும் உள்ளது.

முந்தைய ஊதியக் குழுக்களை அமல்படுத்தும்போது கடைப்பிடிக்கப்பட்ட காலவரையறையின் அடிப்படையில் பார்க்கையில், புதிய ஊதியக் குழுவைச் செயல்படுத்துவதற்குச் சிறிது காலம் ஆகலாம். உதாரணமாக, 7–வது ஊதியக் குழுவை முழுமையாக அமல்படுத்த சுமார் இரண்டரை ஆண்டுகள் தேவைப்பட்டன 8–வது ஊதியக் குழுவை அமல்படுத்துவதில் ஏதேனும் தாமதம் ஏற்பட்டால், ஊழியர்களுக்கு நிலுவைத் தொகை பெறும் பலன் கிடைக்கும். மதிப்பீடுகளின்படி, கீழ்நிலை ஊழியர்கள் ₹3 லட்சத்திற்கும் அதிகமான நிலுவைத் தொகையைப் பெறுவதற்கான வாய்ப்புள்ளது. அதேவேளையில், நிலை 5–இல் (Level 5) உள்ள ஊழியர்களுக்கான நிலுவைத் தொகை ₹9 லட்சத்திற்கும் அதிகமாக இருக்கக்கூடும்.

# பழனி முருகன் மலைக் கோவிலில், தமிழ் புத்தாண்டையொட்டி பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர்!



பழனி, ஏப். 14–

பழனி முருகன் மலை கோவிலில் தமிழ் புத்தாண்டையொட்டி பக்தர்கள் கூட்டம் கூட்டமாக சாமி தரிசனம் செய்தனர்

இன்று ஏப்ரல் 14ஆம் தேதி புதிய பராபவ தமிழ் புத்தாண்டையொட்டி பழனி முருகன் மலை கோவில் நடை அதிகாலை 4:00 மணிக்கே திறக்கப்பட்டது. தமிழ் புத்தாண்டையொட்டி முருகப்பெருமானுக்கு சிறப்பு அபிஷேகம், சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டது. பின்பு அதிகாலை விஸ்வரூப தரிசனம் நடைபெற்றது.

தமிழ் புது வருட பிறப்பையொட்டி ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். பக்தர்களுக்கான தரிசனம் ஏற்பாடுகளை கோவில் நிர்வாக அதிகாரி மாரிமுத்து, துணை ஆணையர் வெங்கடேசன், உதவி ஆணையர் செந்தில்குமார் ஆகியோர் செய்து வந்தனர்.

# வாக்கு சேகரிப்பின்போது மக்களுடன் அமர்ந்து உணவருந்திய எல்.முருகன்!



திருப்பூர், ஏப். 14–

திருப்பூர் மாவட்டம் அவிநாசி சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் மத்திய இணை மந்திரியும் பாஜக வேட்பாளருமான எல். முருகன் அங்குள்ள வாக்காளர்களை சந்தித்து தேர்தல் பிரசாரம் மேற்கொண்டு வருகிறார். இந்த நிலையில், இன்று பழங்கரை பஞ்சாயத்திற்குட்பட்ட ஆயக்கவுண்ட ம்பாளையம் ஏ.டி. நகர் பகுதியில் வசிக்கின்ற மக்களைச் சந்தித்து எல்.முருகன் வாக்கு சேகரித்தார். அப்போது அப்பகுதி மக்களுடன் நீண்ட நேரம் கலந்துரையாடினார்.

மேலும், அவர்களுடன் உணவருந்திய எல். முருகன் அப்பகுதி மக்களின் தேவைகளான கல்வி மற்றும் சுகாதாரம் குறித்த கோரிக்கைகளையும் கேட்டறிந்தார். மேலும், தமிழகத்தை ஆட்சி செய்து வரும் திமுக, மக்களின் உழைப்பைச் சுரண்டுவது பற்றியும், மக்கள் விரோத ஆட்சியை நடத்திக் கொண்டிருப்பது பற்றியும் பொதுமக்களிடம் விளக்கமளித்தார்.

தொடர்ந்து தேசிய ஜனநாயக கூட்டணியின் ஆட்சி அமைந்தால் தமிழகத்திற்கும், அவிநாசி சட்டமன்றத் தொகுதிக்கும் ஏற்படவிருக்கும் நன்மைகள் குறித்தும் விளக்கமளித்தார். மத்திய இணை மந்திரி எல்.முருகனின் இந்த எளிமையான செயல் கண்டு, அப்பகுதி மக்கள் மிகுந்த உற்சாகத்துடன் அவரை உபசரித்தனர்.




**இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்**

127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881


# வேலை வாய்ப்பு

## தமிழ்நாடு ரயில்வே வேலை!

## 84 காலியிடங்கள் | சம்பளம்: Rs.30,000




Indian Railway Catering and Tourism Corporation (IRCTC) நிறுவனம் தென்னிந்திய மாநிலங்களான தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகாவில் பணியாற்ற Hospitality Monitors பதவிக்காக 84 காலியிடங்களை அறிவித்துள்ளது. மாதம் ரூ.30,000 சம்பளத்துடன், முன் அனுபவம் தேவையில்லை என்பதால் புதியவர்களும் (Freshers) இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

நிறுவனம் Indian Railway Catering and Tourism Corporation (IRCTC)

வகை மத்திய அரசு வேலை

காலியிடங்கள் 84

பணியிடம் தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா

பதவி: Hospitality Monitors

காலியிடங்கள்: 84

சம்பளம்: மாதம் Rs.30,000/–

கல்வி தகுதி:

1. B.Sc. in Hospitality and Hotel Administration. (or)
2. BBA/MBA (Culinary Arts) from Indian Culinary Institutes under Ministry of Tourism. (or)
3. B.Sc. Hotel Management and catering Science. (or)
4. M.B.A (Tourism and Hotel Management) from Government recognized Universities affiliated to UGC/ AICTE /Government of India/ State Government. (CIHM/ SIHM/ PIHM), affiliated National Council for Hotel Management and Catering Technology (NCHM & CT)/ UGC /AICTE /Govt of India.

குறிப்பு: முன் அனுபவம் தேவையில்லை

வயது வரம்பு: 18 முதல் 27 வயது வரை

வயது தளர்வு:

SC/ST 5 ஆண்டுகள்

OBC 3 ஆண்டுகள்

PwBD (Gen/EWS) 10 ஆண்டுகள்

PwBD (SC/ST) 15 ஆண்டுகள்

PwBD (OBC) 13 ஆண்டுகள்

விண்ணப்ப கட்டணம்: கட்டணம் கிடையாது

தேர்வு செய்யும் முறை: தகுதியான நபர்கள் நேரடி நேர்காணல் மூலம் தேர்வு செய்யப்படுவார்கள்

விண்ணப்பிக்கும் முறை:

தகுதியான நபர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள விண்ணப்ப படிவத்தினை பூர்த்தி செய்து தேவையான கல்வி சான்றுகளுடன் நேர்காணலில் கலந்து கொள்ளவும்.

நேர்காணல் நடைபெறும் இடம்: 6A, The Rain Tree Place, No.9, Mc Nichols Road, Chetpet, Chennai 600031

நேர்காணல் நடைபெறும் நாள் நேரம்: 25.04.2026, 27.04.2026 & 28.04.2026. (From 10.30 hrs to 17.30 hrs)

குறிப்பு: விண்ணப்பிப்பதற்கு முன்பு அதிகாரப்பூர்வ அறிவிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கும் தகுதி அனைத்தும் தங்களிடம் இருக்கிறதா என உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

# பசி கொடுமையின் உச்சம் சூடானில் இலை தழைகளை தின்று உயிர் வாழும் மக்கள்!



கார்ட்டும், ஏப். 14–

சூடான் ராணுவத்துக்கும். துணை ராணுவப்படைக்கும் இடையே கடந்த 3 ஆண்டுகளாக நடை பெற்று வரும் போர், உலகிலேயே மிகப்பெரிய மனிதாபிமான நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக நார்த் டார்பர் மற்றும் தெற்கு கோர்டோபன் பகுதிகளில் நிலைமை படுமோசமாக உள்ளது.

அங்குள்ள மக்கள் பசியைத் தாங்க முடியாமல் மரங்களின் இலை தழைகளையும், கால்நடை தீவனங்களையும் தின்று உயிர் பிழைக்கும் அவல நிலையில் உள்ளனர்.

கிட்டத்தட்ட 2.89 கோடி மக்கள் கடும் உணவுப் பஞ்சத்தில் சிக்கியுள்ளனர். போர்க்களத்தில் விவசாய நிலங்கள் அழிக்கப்பட்டும், உணவுச் சந்தைகள் முடக்கப்பட்டும் உள்ளதால் இந்த நெருக்கடி ஏற்பட்டுள்ளது. குறிப்பாக பெண்கள் மற்றும் சிறுமிகள் உணவு தேடி வெளியே செல்லும்போது பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகும் அபாயமும் உள்ளது.

சர்வதேச உதவி நிறுவனங்களுக்கு நிதி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், அங்குள்ள சமூக சமையல் கூடங்களும் மூடப்படும் நிலையில் உள்ளன.






# அனல் பறக்கும் தேர்தல் களம்..!





புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை சட்டமன்ற தொகுதி பாஜக வேட்பாளர் உதயகுமாரை ஆதரித்து தஞ்சாவூர் புதுக்கோட்டை சாலையில் பாஜக தேசிய தலைவர் நிதின் நபின் பிரசாரம் மேற்கொண்டு தாமரை சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். பாஜக வேட்பாளருக்கு ஆதரவு திரட்டியபோது தொண்டர்கள் மலர் தூவி உற்சாக வரவேற்பு அளித்தனர்.



புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் அமைச்சர் ரகுபதி, கடையக்குடி, வலையம்பட்டி, மற்றும் வன்னியம்பட்டி கிராமங்களில் மக்களை நேரில் சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தார். அப்போது சொல்லி செய்ததையும், சொல்லாமல் செய்ததையும், விசாலமாய் நீளும் நலத்திட்டங்களையும் எடுத்துக்கூறி தனக்கு வாக்கு அளிக்குமாறு கேட்டுக்கொண்டார்.





தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் ஈரோடு மாவட்ட இளைஞர் அணி சார்பில் வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் 100 சதவீதம் வாக்களிப்போம் என்பதை வலியுறுத்தி தினசரி மார்க்கெட்டில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் அ. லாரன்ஸ் ரமேஷ் ஏற்பாட்டில் பேரமைப்பின் மாநில தலைவர் ஏ.எம்.விக்கிரமராஜா கலந்து கொண்டு விழிப்புணர்வு பிரசுரத்தை வழங்கினார். இந்நிகழ்வில் மாநில துணைத் தலைவர் ப.திருமூர்த்தி மாவட்ட தலைவர் இரா.க.சண்முகவேல் துணை தலைவர் நெல்லை ஏ.ராஜா செயலாளர் பொ. இராமச்சந்திரன் பொருளாளர் உதயம் பொ.செல்வம், கோவை மண்டல இளைஞரணி ஒருங்கிணைப்பாளர் மு.பாலகிருஷ்ணன் மாவட்ட செய்தி தொடர்பாளர் ஏ.ஆர்.சாதிக் பாட்சா உள்ளிட்ட சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திருப்பூர் மாவட்டத்தில் பிரசாரம்! விஜய்க்கு தேர்தல் ஆணையம் அனுமதி!!

திருப்பூர், ஏப். 14–

திருப்பூர் மாவட்டத்தில் போட்டியிடும் தமிழக வெற்றிக் கழக வேட்பாளர்களை ஆதரித்து, கட்சியின் தலைவர் விஜய் செவ்வாய்க்கிழமை மாலை பிரசாரம் மேற்கொள்கிறார். இதற்காக தேர்தல் ஆணையம் அனுமதி வழங்கியுள்ளதாக கட்சியின் பொதுச்செயலர் என். ஆனந்த் தெரிவித்துள்ளார்.

கோவை விமான நிலையத்துக்கு வரும் விஜய், அங்கிருந்து கொச்சின்–சேலம் 6 வழிச் சாலை வழியாக அவிநாசி செல்கிறார். அதைத்தொடர்ந்து தமிழக வெற்றிக் கழகம் சார்பில் திருப்பூர் மாவட்டத்தில் போட்டியிடும் தவெக வேட்பாளர்களை ஆதரித்து, அவிநாசி புதிய பேருந்து நிலையம் அருகே விஜய் பிரசாரம் (சாலை வலம்) செய்கிறார்.

அதைத்தொடர்ந்து பெருமாநல்லூர் நான்கு வழிச்சாலை சந்திப்பில் திருப்பூர் மாவட்டத்தில் போட்டியிடும் தவெக வேட்பாளர்களை அறிமுகம் செய்து பேசுகிறார்.

இதுதொடர்பாக கட்சியின் பொதுச்செயலர் என். ஆனந்த் தனது எக்ஸ் பக்கத்தில் பதிவு ஒன்றையும் வெளியிட்டுள்ளார்.

அந்தப் பதிவில், "கட்சித் தலைவர் விஜய், இன்று (ஏப். 14) திருப்பூர் மாவட்டத்தில் தேர்தல் பிரசாரம் மேற்கொள்ள தேர்தல் ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது.

திருப்பூர் மாவட்டம், பெருமாநல்லூர் முதல் பூலுவபட்டி பிரிவு வரை மதியம் 2 மணி முதல் வாகனத்தின் வாயிலாக தேர்தல் பிரசாரம் செய்ய தேர்தல் ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது.





இந்தப் பிரசார நிகழ்ச்சிக்காக, தேவையான அடிப்படை வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பிரசாரத்தில் கலந்துகொள்ள வரும் கழகத் தலைவர் அவர்களின் பிரசார வாகனத்தை இருசக்கர வாகனங்கள் உள்ளிட்ட எவ்வித வாகனங்களிலும் யாரும், கண்டிப்பாகப் பின்தொடரக் கூடாது. இதை உறுதியாகக் கடைபிடிக்க வேண்டும். அத்தோடு தேர்தல் ஆணைய விதிகளை பின்பற்றுமாறும், குறிபிட்ட நேரத்திற்கு முன்கூட்டியே வந்து காத்துக்கொண்டிருப்பதைத் தவிர்க்குமாறும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும், இந்தத் தேர்தல் பிரசார நிகழ்வுகளில், கர்ப்பிணிப் பெண்கள், சிறுவர் – சிறுமியர், பள்ளி மாணவ – மாணவியர், மூத்த குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள், உடல்நலம் குன்றியவர்கள் மற்றும் பொதுமக்கள் நேரில் வந்து கலந்துகொள்வதைத் தவிர்த்து, சமூக வலைத்தளம் மற்றும் தொலைக்காட்சி நேரலைகளில் கண்டு, அனுமதிக்கப்பட்டவர்கள் மட்டுமே பங்கேற்க முழு ஒத்துழைப்பு தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

## வாக்காளர்களுக்கு பணம் வழங்குவதைத் தடுக்க 'ட்ரோன்' கண்காணிப்பு: தேர்தல் ஆணையம் திட்டம்!

சென்னை, ஏப். 14–



தேர்தலின் போது வாக்காளர்களுக்கு பணம் வழங்குவதைத் தடுக்கும் வகையில் ட்ரோன் கேமராக்கள் மூலம் கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க தேர்தல் ஆணையம் திட்டமிட்டுள்ளது.

அதேபோன்று வாக்குப்பதிவு நாள், அதற்கு முந்தைய இரு நாள்கள் என மூன்று நாள்களுக்கு டாஸ்மாக் கடைகளை மூடவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தேர்தல் ஆணைய அதிகாரிகள் கூறியதாவது:

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் பணியில் உள்ள அலுவலர்கள் 1.5 லட்சம் பேர் தபால் வாக்களிக்க விண்ணப்பித்துள்ளனர். தவிர, 85 வயதுக்கு மேற்பட்ட 1.20 லட்சம் பேர், மாற்றுத்திறனாளிகள் 70,000 பேர் என மொத்தம் 1.90 லட்சம் பேர் தபால் வாக்கு செலுத்த தகுதி உள்ளவர்கள். அவர்களில் 15 ஆயிரம் பேர் தபால் வாக்கு செலுத்தியுள்ளனர்.

பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பொருத்தவரை 299 துணை ராணுவக் குழுக்கள் தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இதுவரை 115 துணை ராணுவக் குழுக்கள் வந்துள்ளன. தமிழகம் முழுவதும் மொத்தம் 4,023 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இவர்களில் 3,579 பேர் ஆண்கள், 443 பேர் பெண்கள், ஒருவர் மூன்றாம் பாலினத்தவர்.

வாக்காளர்களுக்கு பூத் சிலிப் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. வாக்காளர் பட்டியலில் பெயர் உள்ளதா என்பதை அறிய கைப்பேசி எண்ணில் இருந்து 'இபிஐசி' என ஆங்கிலத்தில் பதிவிட்டு ஒரு இடைவெளிக்குப் பிறகு வாக்காளர் அட்டை எண்ணைப் பதிவு செய்து 1950 என்ற எண்ணுக்கு குறுஞ்செய்தி அனுப்பினால் தகவல் உறுதிபடுத்தப்படும்.

தமிழக பேரவைத் தேர்தலுக்கு ரூ.1,032 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கூடுதல் நிதி இதுவரை கேட்கப்படவில்லை.

தமிழகத்தில் வாக்குச் சாவடிகள் எண்ணிக்கை 75,064–ஆக உயர்ந்து உள்ளது. அவற்றில் பதற்றமான வாக்குச்சாவடிகள் 5,938 உள்ளன.

இந்த முறை 140 தொகுதிகளில் ஒரே ஒரு வாக்குப்பதிவு இயந்திரமும், 89 தொகுதிகளில் இரண்டு வாக்கு பதிவு இயந்திரமும், பெரம்பூர், கொளத்தூர், ஆர்.கே. நகர் ஆகிய தொகுதிகளில் 3 வாக்குப் பதிவு இயந்திரங்களும், கரூரில் மட்டும் அதிகபட்சமாக 5 வாக்குப் பதிவு இயந்திரங்களும் பயன்படுத்தப்பட உள்ளன.

'சி விஜில்' செயலி மூலம் 3,791 புகார்கள் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வாக்குப் பதிவு நாளான 23–ஆம் தேதி மற்றும் அதற்கு முந்தைய இரு நாள்கள் (ஏப். 21, 22) டாஸ்மாக் மதுக் கடைகளைத் திறக்க வேண்டாம் என உத்தரவிடப்பட்டுள்ளது.

தேர்தல் பறக்கும் படையினர் சோதனையில் பறிமுதல் செய்யப்பட்டவற்றில் உரிய ஆவணங்கள் உள்ளவர்களிடம் ரூ.265 கோடி மதிப்பிலான பணம், நகை திருப்பி ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதுவரை பணமாக ரூ.126 கோடி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. ரூ.75 கோடி மதிப்பிலான போதைப் பொருள்கள், ரூ.295 கோடி மதிப்பிலான தங்கம்– வெள்ளிப் பொருள்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

வாக்காளர்களுக்கு பணம் கொடுப்பதைத் தடுக்க ட்ரோன் கேமரா மூலம் கண்காணிக்கத் திட்டமிடப்பட்டு வருகிறது என்று அவர்கள் தெரிவித்தனர்.

## நடிகர் மன்சூர் அலி கான் மருத்துவமனையில் அனுமதி!

சென்னை, ஏப். 14–



தமிழ்நாடு சட்டசபை தேர்தல் வருகிற 23–ஆம் தேதி நடைபெறுகிறது. தேர்தலை ஒட்டி அரசியல் கட்சிகள் முழு வீச்சில் பரப்புரை செய்து வருகின்றன.

இந்த நிலையில், பரப்புரையின் போது உடல்நலக்குறைவு ஏற்பட்டு வேட்பாளர்கள் சிலர் சிகிச்சை பெற்று வருகின்றனர். முன்னதாக பா.ஜ.க. சார்பில் வானதி ஸ்ரீனிவாசன் உடல்நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

இதுதவிர தேர்தல் பரப்புரையில் ஈடுபட்ட பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் மயங்கி விழுந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை எடுத்து வருகிறார்.

இந்த வரிசையில், லால்குடி தொகுதியில் சுயேட்சை வேட்பாளராக களமிறங்கி இருக்கும் நடிகர் மன்சூர் அலி கான் உடல்நலக்குறைவு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## பெண்களுக்கு மாதம் ரூ.2 ஆயிரம், ஆண்டுக்கு 3 இலவச சிலிண்டர்: பாஜ தேர்தல் வாக்குறுதி!

சென்னை, ஏப். 14–





தமிழக பா.ஜ., தேர்தல் அறிக்கையை முன்னாள் தேசியதலைவர் ஜே.பி.நட்டா வெளியிட்டார். அதன் விபரம் பின்வருமாறு:

* தைப்பூசத் திருநாள் மாநில விழாவாக அறிவிக்கப்படும்.
* மின்சார இரு சக்கர வாகனம் வாங்க தகுதியுள்ள பெண்களுக்கு ரூ.25 ஆயிரம் மானியம்.
* அதிக பக்தர்கள் வரும் கோவில்களில், தினமும் 2 மணி நேரம் உள்ளூர் மக்களுக்கு பிரத்யேக தரிசனம் ஒதுக்கப்படும்.
* குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூ.2 ஆயிரம் வழங்கப்படும்.
* சிறு மற்றும் குறு விவசாயிகள் கால்நடை வளர்ப்பு, இறால் வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, கோழி வளர்ப்பு போன்றவற்றை தொடங்குவதற்கு ஒருமுறை நிதியுதவியாக 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.
* தமிழகத்தில் 10 நகரங்களை தேசத்தின் முதல் 100 தூய்மையான நகரங்கள் பட்டியலில் இடம்பெறச் செய்வோம்.
* ஆண்டுக்கு 3 விலையில்லா காஸ் சிலிண்டர்கள் வழங்கப்படும், அவை பொங்கல், தமிழ் புத்தாண்டு மற்றும் தீபாவளி பண்டிகைகள் பொழுது வழங்கப்படும்.

## தமிழக சட்டசபை தேர்தல்: 20 ஆயிரம் ரவுடிகள் தீவிர கண்காணிப்பு!

சென்னை, ஏப். 14–





தமிழகத்தில் வருகிற 23–ந்தேதி (வியாழ க்கிழமை) சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. 234 தொகுதிகளிலும் வாக்குப்பதிவை அமைதியான முறையில் நடத்தி முடிக்க தேர்தல் ஆணையம் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

குறிப்பாக, காவல்துறை அதிகாரிகளும் அமைதியை நிலைநாட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அந்த வகையில், சென்னை உள்பட 38 மாவட்டங்களிலும் ரவுடிகளை 4 பிரிவுகளாக பிரித்து போலீசார் கண்காணித்து வருகின்றனர். ஏ பிளஸ், ஏ, பி, சி என 4 பிரிவுகளாக ரவுடிகளை பிரித்து, தனித்தனியாக பட்டியலிட்டு உள்ளனர். அதன்படி, தமிழகம் முழுவதும் 20 ஆயிரம் ரவுடிகளின் செயல்பாடுகள் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருகிறது.

சென்னையில் மட்டும் 4 ஆயிரம் ரவுடிகள் உள்ளனர். இதில், பல ரவுடிகள் தலைமறைவாக இருக்கின்றனர். அவர்கள் தேர்தல் நேரத்தில் தங்கள் பகுதியில் ஊடுருவி சட்ட விரோத செயல்களில் ஈடுபட வாய்ப்பு உள்ளது. எனவே, அவர்கள் பற்றிய தகவல்களை போலீசார் சேகரித்து, தேடி வருகின்றனர். கடந்த சில நாட்களாக நடைபெற்று வரும் போலீசாரின் இந்த வேட்டையில் சுமார் 100 பேர் சிக்கியுள்ளனர்.

தலைமறைவாக இருக்கும் ரவுடிகளை பிடிக்கும்போது, அவர்கள் திருந்தி வாழ ஆசைப்பட்டால் அதற்கும் போலீசார் அனுமதி அளித்து, நன்னடத்தை சான்றிதழ் வழங்கவும் முடிவு செய்துள்ளனர். அவர்களிடம் குற்ற நடைமுறை சட்டப்பிரிவு, 107, 109, 110 ஆகியவற்றின் கீழ் கையெழுத்து பெறவும் போலீசார் திட்டமிட்டுள்ளனர்.

இதுகுறித்து போலீஸ் உயர் அதிகாரி ஒருவர் கூறும்போது, "தமிழகத்தில் எப்போதுமே பெரிய அசம்பாவித சம்பவங்கள் ஏதும் இல்லாமல் சட்டசபை தேர்தல் நடைபெற்று வந்துள்ளது. அந்த வகையில் நடைபெற உள்ள சட்டசபை தேர்தலையும் அமைதியாக நடத்தி முடிக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன" என்றார்.

## திமுகவுக்கு ஆதரவாக அரவிந்த் கேஜரிவால் பிரசாரம்! ஏப்.20 தமிழகம் வருகிறார்!!



சென்னை, ஏப். 14–

முதல்வர் ஸ்டாலினுக்கு ஆதரவாக தில்லியின் முன்னாள் முதல்வர் அரவிந்த் கேஜரிவால் பிரசாரம் மேற்கொள்ளவுள்ளார்.

தமிழ்நாட்டில் பேரவைத் தேர்தலுக்கு இன்னும் 8 நாள்களே இருக்கும் நிலையில், தேர்தல் பணிகள் மிகத் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. முதல்வர் ஸ்டாலின், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி, தவெக தலைவர் விஜய், நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் உள்ளிட்டோரும் தீவிரமாக பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். மத்தியில் ஆளும் கட்சியான பாஜக சார்பில் பிரதமர் மோடி, பாஜக தேசிய தலைவர் நிதின் நபின், பாஜக ஆளும் மாநில முதல்வர்கள் தேவேந்திர ஃபட்னவீஸ், பஜன்லால் சர்மா உள்ளிட்டோரும் தமிழ்நாட்டுக்கு வந்து பிரசாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலையில், தில்லியின் முன்னாள் முதல்வரும், ஆம் ஆத்மி கட்சியின் தேசிய ஒருங்கிணைப்பாளருமான அரவிந்த் கேஜரிவால் வருகிற ஏப். 20 ஆம் தேதி சென்னை வரவுள்ளதாக ஆம் ஆத்மி கட்சி தெரிவித்துள்ளது.

இரண்டு நாள்கள் சென்னையில் முகாமிட்டிருக்கும் கேஜரிவால், முதல்வர் ஸ்டாலின் மற்றும் திமுகவுக்கு ஆதரவாக பேரணிகள் மேற்கொண்டு பிரசாரம் செய்யவுள்ளார். மக்களவைத் தேர்தலில் இந்தியா கூட்டணியில் இடம்பெற்றிருந்த திமுகவுக்கு ஆதரவாகக் கூட்டணியை வலுப்படுத்தும் நோக்கில் கேஜரிவால், தமிழகம் வரவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026–ஐ முன்னிட்டு தேனி மாவட்டம் தேனி–அல்லிநகரம் நகராட்சி பகுதியில் வாக்காளர்களுக்கான தகவல் சீட்டு வினியோகப்பணிகளை மாவட்ட தேர்தல் அதிகாரி ரஞ்ஜித்சிங் பார்வையிட்டார்.



தேனி மாவட்டம் பழனிசெட்டிபட்டி பேரூராட்சியில் உள்ள பழனியப்பா நினைவு மேல்நிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குசாவடி மையத்தில் அடிப்படை தேவைகள், வசதிகள் குறித்து மாவட்ட தேர்தல் அதிகாரி ரஞ்ஜித்சிங் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



தேனி மாவட்டம் ஆட்சியர் கூட்டரங்கில் சமத்துவ நாளை முன்னிட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்சித்சிங் தலைமையில் சமத்துவ நாள் உறுதிமொழியினை அரசு அலுவலர்கள், பணியாளர்கள் ஏற்றுகொண்டனர். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் ராஜ்குமார் உள்ளார்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020